02.03.2026 OS.No.257/2023 PW3 Name :.நல்மா கலீலுல்லா

குறுக்கு விசாரணை

1. நான் வாதியின் உடன்பிறந்த சகோதரர். நான் தனியாக வசிக்கிறேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சி அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி கேட்டுகொண்டதன் பேரில் தான் சாட்சி கூறவந்துள்ளேன். வாதியின் வீட்டில் வைத்துதான் பிரதிவாதிக்கு பணம் கொடுக்கபட்டது. பிரதிவாதி சி.எம்.சி மருத்துவமனையில் காண்ரெக்ட் வேலை எடுத்துள்ளதாக வாதியிடம் பணம் கேட்டு லாபத்துடன் திருப்பி கொடுப்பதாக கூறினார். லாபம் தொடர்பான விவரங்களை பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன்.
2. ரூ.8,00,000/—பணத்தை வாதி ரொக்கமாக தான் பிரதிவாதிக்கு கொடுத்தார். வாதிக்கு ஆசிரியர் பணி மூலமும் தொழில் மூலம் அந்த பணம் கிடைத்தது. ரூ.8,00,000/— வாதிடம் இருந்துள்ளது என்பதை காட்டகூடிய ஆவணங்கள் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வாதியிடம் காண்ரெக்ட் தொடர்பான விவரங்களை எதையும் கேட்டு வாங்கி பார்க்கவில்லை. பிரதிவாதியிடம் கடனுறுதி சீட்டு எதுவும் எழுதி வாங்கவில்லை. பிரதிவாதிக்கு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இருப்பார்.
3. 23.01.2023ல் காசோலை கொடுக்கப்பட்டது. நான்கு காசோலைகள் கொடுக்கபட்டது. வாதியின் வீட்டில் வைத்துதான் அது கொடுக்கபட்டது. பிரதிவாதியிடம் காசோலை திரும்ப கேட்டும் அவர் கொடுக்கவில்லை.

நேரில் தான் கேட்டோம். அவருடைய கடைக்கு சென்றும் கேட்டுள்ளோம். வேலூர் சத்துவாச்சாரில் பிரதிவாதியின் கடை உள்ளது. உண்மையில் பிரதிவாதியின் கடை பற்றி எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. ரூ.2,00,000/–த்திற்கான 4 காசோலைகளை பிரதிவாதி தான் கொடுத்தார்.

4. வாதி பிரதிவாதியை ஏமாற்றி காசோலைகளை பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தேதியிட்டு கொடுக்கவில்லை என வாதி கூறியுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. பணத்தை திரும்ப கேட்டதற்கு தான் பிரதிவாதி காசோலை கொடுத்தார். வாதியிடம் பிரதிவாதி எந்த பணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றும் பிரதிவாதியுடன் அவர் தொழில் பாட்னர் இல்லை என்றால் சரியல்ல.

5. ரூ,8,00,000/–த்திற்கான வருவாய் ஆதாரங்களை வருமான ஆவணங்களில் வாதி காட்டவில்லை என்றால் சரியல்ல. காசோலை கணக்கு முடிக்கபட்டது என்ற காரணத்திற்காக திருப்பபட்டது. பிரதிவாதியின் வங்கி கணக்கு ஏற்கனவே முடிக்கபட்ட நிலையில் அந்த விவரம் தெரியாமல் பிரதிவாதியை ஏமாற்றி காசோலை பெறபட்டது என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 02/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

\

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.02 16:45:06 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.